# <u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

**1.** நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பொன்னப்ப நாடார் காலனியில் உள்ள சிறுவர் விளையாடும் பூஙகாவை காலனி மக்கள் நலன் கருதி சிறுவர் பூஙகாவை நகராட்சி பராமரிக்கவேண்டும். அல்லது நிபந்தனைகளுக்குட்பட்டு பொன்னப்ப நாடார் காலனி நல சஙகம் பராமரிக்க கொடுத்தால் நல்லமுறையில் பூஙகாவை பராமரிப்போம் என்று பொன்னப்ப நாடார் காலனி நல சஙகம் சார்பாக மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி சிறுவர் பூஙகா நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பூஙகாவாகும்.

எனவே மேற்படி பூஙகாவை நகராடட்சி மூலம் பராமரிப்பது அல்லது பொன்னப்ப நாடார் குடியிருப்போர் நல சஙகம் சார்பாக பராமரிக்க நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழஙகுவது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> மன்றம் முடிவு செய்யலாம். கோப்பு எண்.6135/2011/எப்.1

**தீர்மான எண் : 575 – ஒத்திவைக்கப்பட்டது.**

# <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சி அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தில் நிற்கும் பழமை வாய்ந்த பச்சை மாமரத்தால் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளதை கருதி நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அனுமதியும் மாவட்ட வன அலுவலர், கன்னியாகுமரி கோட்டம் அவர்களிடம் விலை நிர்ணயம் செய்து பெற்று 10.08.2011 அன்று பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதில் திரு.றி.அசோக்குமார், நாகர்கோவில் என்பவரால் ரூ.2150/– க்கு உயர்ந்த ஏல கேள்வி கேட்கப்பட்டது. மேற்படி ஏலத்தொகையின்படி மேற்படி மரத்தை வெட்டி எடுத்து செல்ல உத்தரவு வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. ஏலத்தொகை ரூ.2150/– மாவட்ட வனத்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.1054/– ஐ விட கூடுதலாக உள்ளதால் அனுமதிக்கலாம்.

2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதியுடன் ஏலத் தொகையினை பெற்று மரத்தினை வெட்டி எடுத்து செல்ல உத்தரவு வழஙகி நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7657/2008/இ3

**தீர்மான எண் : 576 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.50, 193 நாள் 25.02.2011– ன் படி இந்நகராட்சி கணணி பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள் ஒராண்டு அடிப்படையில் வாஙகிட செலவினத்திற்கு ரூ.3.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தற்போது உள்ளாட்சி தேர்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு கூடுதலாக டோனர்கள் தேவைப்படுவதால் கூடுதலாக ரூ.3.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.20026/2009/இ3

**தீர்மான எண் : 577 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் 2– வது தளத்தில் ( Bay) அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் மேற்கூரை மற்றும் நகராட்சி ஆணையர் குடியிருப்பின் மேற்கூரையை சரி செய்யும் பணிக்கு 05.08.2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.வி.ஜோசப் அருள்ராஜ் (–) 0.38 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.எ.பாண்டியன், (+) 2.47% மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு –</u> 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.வி.ஜோசப் அருள்ராஜ் ( – ) 0.38 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி நாள் 18.07.2011 – ல் ரூ.1,95,000/–ற்கு டெண்டர் கோரியதற்கும் மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழுஙகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.80/2011–2012

**தீர்மான எண் : 578 – அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 – ல் புதுத்தெரு, தெற்கு பரசுராமன் பெருந்தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு 08.08.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.வி. மாதவன் (–) 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.சி.குமார் (+) 0,38 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு –</u> 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.வி. மாதவன் (–) 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி பணி குடிநீர் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழுஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. நகர்மன்றத்தீர்மானம் எண்.289 நாள் 31.05.2011 – ல் ரூ.1,,20,000/– ற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

ம.எண்.43/2011–2012

**தீர்மான எண் : 579 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4– ல் சிவதாணு மண்டபம் சாலை, கிரவுண்தெரு மற்றும் தெலுஙகு செட்டித்தெருவில் 3'' பி.வி.சி.குழாய் ( மெயின் லைன் ) பதிக்கும் பணிக்கு 08.08.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1 திரு.வி. மாதவன் (–) 0.14 % மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.சி.குமார் (+) 0.65 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு –</u> 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.வி.மாதவன்(–)0.14% மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி பணி குடிநீர் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழுஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. நகர்மன்றத்தீர்மானம் எண்.291 நாள் 31.05.2011 – ல் ரூ.85,000/– ற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

ம.எண்.44/2011–2012

**தீர்மான எண் : 580 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41 – ல் அரசுத் தொடக்கப்பள்ளி இசஙகன்விளையின் அருகில் இயஙகி வந்த மின் மோட்டார் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் புதிய போர் போட்டு மோட்டார் பொருத்த நகர்மன்ற உறுப்பினரின் மனுவின்படி இடம் ஆய்வு செய்யப்பட்டு உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.13991/2011/இ2

**தீர்மான எண் : 581 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்குட்பட்ட முக்கடல் அணையிலிருந்து தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வருகின்ற 600 mm பிரதான குழாய் அருகுவிளை அம்மன்கோவில் அருகில், கிருஷ்ணன்கோவில் வடக்குத்தெரு, பெரிய நாடார் குடியிருப்பு ஆகிய மூன்று இடஙகளில் உடைப்பு ஏற்பட்டதை சரி செய்யவும் மற்றும் உடைந்த சிறு பாலத்தை சரி செய்யவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,30,000/– ஆகும். எனவே மன்றத்தின் அனுமதிக்காக.

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.12454/2011/இ2

**தீர்மான எண் : 582 – அனுமதிக்கப்பட்டது.**

8. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.வரிவிதிப்பு எண்.2599 வரிவிதிப்பாளரின் பெயர் ரசல்ராஜ் பக்திநாதன் கதவு எண். 48 பி5, களியங்காடு தெருவில் உள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி புதிய வரிவிதிப்பு வரி விலக்களிக்க சம்பந்தமாக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.No,12767/01 எண்ணாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும் அதற்கு ஆகும் செலவு கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதி வழஙகலாம்.

2 . நகராட்சி சார்பாக திருமதி.எஸ்.ஸ்ரீமதி வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.15154/2010/அ2

**தீர்மான எண் : 583 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்ண்ட 6 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ,54,750/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.1 கட்டையன்விளை பஞ்சபாண்டவர் கோவில்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | ரூ. |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8250/– |
| II | வார்டு எண்.2 கேசவதிருபாப்புரம் மெயின்ரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 7150/– |
| III | வார்டு எண்.4 தெலுஙகு செட்டித்தெரு கிணறு வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 5 குதிரைவேக ( 6'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 11850/– |
| IV | வார்டு எண்.4 கிரவுண் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 12050/– |
| V | வார்டு எண்.5 வாத்தியார்விளை காலசாமி கோவில்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | பழுது பட்ட 1.5 குதிரை வேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட்டை துாக்கிவிட்டு மாற்று புதிய 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்தல் | 8200/– |
| VI | வார்டு எண்.12 தளவாய்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 கு.ரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 7250/– |
| | மொத்தம் | 54,750/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.14840/2011/இ2

**தீர்மான எண் : 584 – அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான 2010–2011 – ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம். கோப்பு எண்.17454/2011/பி.3

**தீர்மான எண் : 585 – ஒப்புக்கொள்ளப்பட்டது.**

11. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை ( ந.நி.4. ) அரசாணை (நிலை) எண்.92 நாள் 03.07.2007 – ல் குத்தகைதாரர்கள் அனைத்து பாக்கி தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும் நகர்மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகை தொகையை செலுத்த ஒப்புக்கொள்ளும் நிபந்தனைகளுக்குட்பட்டும், குத்தகைதாரர்களின் வாரிசுகள் அவர்களுடைய பெயரில் உரிமை மாற்றம் பெற உரிமையுடையவராவர் எனவும் சட்டபடியான வாரிசுதாரர்கள் பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக்கட்டணம் ரூ.500/– செலுத்தப்படவேண்டும் என இருந்த நிலையில், இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையதரைப்பாக கடை எண்.14 – ன் கடந்த கால குத்தகைதாரர் திரு.துரைசுவாமி அவர்களின் சட்டபூர்வ வாரிசான திரு..டி.செல்லம் அவர்களுக்கு உரிமை மாற்றம் வழஙகப்படுகையில் மேற்படி அரசாணைக்கு முரணாக ஒரு வருட வாடகை முன் பணமாகவும் ( ரூ.31,704/–) பெயர் மாற்றக்கட்டணம் ரூ.2500/– ம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையில் கண்ட நிபந்தனைபடியான பெயர் மாற்ற கட்டண தொகை ரூ.500/– போக எஞ்சிய தொகை 1045 கணக்கில் உள்ளது. ரூ.2000/– மற்றும் முன்பணம் 4018 கணக்கில் உள்ளது. ரூ.31,704/– ஐயும் மீள குத்தகைகாரருக்கு திரும்ப வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மேற்படி அரசாணைப்படி அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.12023/2010/அ13

**தீர்மான எண் : 586 – அனுமதிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.40 கதவு எண்.25 –1 , கே.பி.ரோடு, வரிவிதிப்பு எண்.60032 கொண்ட கட்டிடத்திற்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததை ஆட்சேபித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.(MD) No.2177/11 எண்ணாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி வழக்கறிஞர் திருமதி.ஸ்ரீமதி நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும் அதற்கு ஆகும் செலவு கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.12983/2011/அ9

**தீர்மான எண் : 587 – அனுமதிக்கப்பட்டது.**

13. மூன்று நகர நல்வாழ்வு மையஙகளின் அத்தியாவசிய தேவையை முன்னிட்டு கீழ் குறிப்பிடும் பொருட்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து வாஙக அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. Glass slide | = | 3000 |
| 2. Sterlisor | = | 3 |
| 3. B.P.apparutus | = | 3 |
| 4. Rubber Sheet 2 meter | = | 10 |
| 5. Baby card clip | = | 10 |
| 6. 6 ½’’ Disoposable glass | = | 100 |

கீழ்க்குறிப்பிடும் நிறுவனஙகளிடமிருந்து விலைப்பட்டியல் கிடைக்கப்பெற்றது.

1. Sujha, Laboratory Equipment Corporation
   32, Alexandra Press road, Nagercoil – 1 :Rs.14015 + 5 % VAT நாள் VAT 27.07.11

2. Premier Scientific Company Rs.14750 + 5 % VAT நாள் 28.07.11
   406, Melaramanputhoor.
   Thalavaipuram. Nagercoil -4

3. Sujha Surgicals Rs.12280 + 5% VAT **29.07.11**
   37/1- 23/9 Bellmer complex
   cape road., Ngercoil- 4

வரிசை எண்.3 – ல் குறிப்பிடப்பட்ட நிறுவனம் குறைந்த விலைப்பட்டியல் கொடுத்துள்ளதால் அந்நிறுவனத்திடமிருந்து மேற்குறிப்பிடும் பொருட்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து வாஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்

கோப்புஎண்.12982/2011/எச்.4.

**தீர்மான எண் : 588 – அனுமதிக்கப்பட்டது.**

14. தகவல் தொழில் நுட்பம் துறை அரசாணை (நிலை) எண்.7 நாள் 12.02.2011 – ல் தொலை தொடர்பு நிறுவனஙகள் புதைவடம் வாடகை நகராட்சிக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூ.5500/– செலுத்தப்பட வேண்டும் எனவும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சீராய்வு செய்யப்படவேண்டும் எனவும் உள்ளது. ஆனால் எத்தனை சதவிகிதம் உயர்வு செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்படவில்லை. மேலும் சீராய்வு செய்யப்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளதால் குத்தகை இனஙகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்வு செய்வதால், அதன் அடிப்படையில் புதைவட வாடகையினையும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாணை (நிலை) எண்.7 நாள் 12.02.2001 **–** ன் படி உயர்வு செய்ய அனுமதிக்கலாம். 15% மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்

2. அரசிடமிருந்து எதிரிகாலத்தில் ஏதேனும் தெளிவுரைகள் /அறிவுரைகள் கிடைக்கப் பெறும் நிலையில் அப்போது மன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்யவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

3.புதைவட வாடகை நிலுவையின்றி செலுத்தும் நிலையில் தான் கூடுதலாக புதைவடம் பதிக்க அனுமதி கோரி வரும் விண்ணப்பஙகள் மீது நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண் : 589 – அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் தரைபாக கடை வைக்க அனுமதி மறுக்கப்பட்டதனை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்ற கிளையில் திரு.எஸ்.சிதம்பரம்பிள்ளை என்பவரால் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.8565/2005 நீதிமன்றத்தில் 26.11.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதனை எதிர்த்து மதுரை உயர்நிதிமன்ற கிளையில் W.A.(MD) No.696/2011 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி வழக்குறைஞர் திருமதி.ஸ்ரீமதி அவர்கள் ஆஜராகி வழக்கு நடத்தவும், வழக்கு செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3634/2005/அ13

**தீர்மான எண் : 590 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சிக்கு சொந்தமான அனாதை மடத்தில் நடைபெற்ற சர்க்கஸ் நிகழ்ச்சியினை காண வருகை தரும் பொதுமக்கள் வாகனஙகளிடம் நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 07.07.2011 – ம் தியதிய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக்கட்டணம் ரூ2464/– வழஙகப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பர செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.16170/2008/அ13

**தீர்மான எண் : 591 – அனுமதிக்கப்பட்டது.**

17. நாகர்கோவில் கதவு எண்.35 எ, புனித மேரி தெரு, ராமன்புதூர் என்ற விலாசத்தில் 08.11.1991 பிறப்பு சான்று தொடர்பாக மாவட்ட நுகர்வோர் குறை தீர்வு மையத்தில் திரு.எஸ்.ஆன்றனி ஜார்ஜ் செல்வராஜ் என்பவர் தாக்கல் செய்த வழக்கு எண்.சி.சி.59/2001 வழக்கில் 1 – வது பிரதிவாதியாக ஆணையர் சேர்க்கப்பட்டுள்ளதால் நகராட்சி சார்பாக வழக்கு எடுத்து நடத்த நகராட்சி வழக்கறிஞர் திருமதி.ரெஜினி தேவி அவர்களுக்கு அனுமதியும் மற்றும் வழக்கு தொடர்பாக அனைத்து செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.00183/2011/எச்.3

**தீர்மான எண் : 592 – அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சியில் தட்டச்சராக 13.07.2009 முதல் பணிபுரிந்து வரும் திருமதி.றி.சாந்தா என்பவர் தனக்கு 01.12.1998 முதல் பணி நிரந்தரம் செய்து உத்தரவிடவேண்டுமென சென்னை உயர்நீதி வழக்கு தொடுத்துள்ளார். வழக்கு எண்.W.P.No.2538/2007 (T) (O..A.No.3767/2001 ) மேற்கண்ட வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தால் 29.06.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட வழக்கிற்காக நாகர்கோவில் நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜர் ஆகியுள்ளார். அன்னாருக்கு மேற்படி வழக்கு செலவு தொகையாக ரூ.10,000/– வழஙக கேட்டுள்ளார். மேற்படி வழக்கு தொகையினை திரு.ரவிச்சந்திரன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழஙக மன்றம் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு** – மேற்கண்ட வழக்கிற்கான செலவுத்தொகை ரூ.10,000/– ஐ சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1017/2006/சி1

**தீர்மான எண் : 593 – அனுமதிக்கப்பட்டது.**

19. இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகள் மற்றும் வடசேரி பேருந்து நிலையத்திலுள்ள 21 Nos.S.V. ஆகியவற்றின் தெருவிளக்குகள் அனைத்தும் ஓராண்டுக்கான பராமரிப்புத்தொகை உத்தேச மதிப்பீடு ரு.28.50 இலட்சத்திற்கு தினசரி நாளேடுகளில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.990/– செலவு வகைக்கு மன்ற ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.11746/2011/இ4

**தீர்மான எண் : 594 – அனுமதிக்கப்பட்டது.**

20. இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.எஸ்.முத்து என்பவரிடம் கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு 1 % பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால் அதனை வழஙக மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| மதிப்பீடு எண். | தொகை |
|---|---|
| 245/2005–2006 | ரூ.5000/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.011754/2011/இ1

**தீர்மான எண் : 595 – அனுமதிக்கப்பட்டது.**

21. இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.பி.தஙகசாமி என்பவரிடம் கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு கூடுதல் வைப்புத்தொகையாக 5 % பில்லில் பிடித்தம் செய்த தொகை காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால் அதனை வழஙக மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| மதிப்பீடு எண். | தொகை |
|---|---|
| 150/2006–2007 | ரூ.28,021/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.18953/2011/இ1

**தீர்மான எண் : 596 – அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.ஏ.ஜெரால்டு மெஜீலா என்பவர் கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு கூடுதல் வைப்புத்தொகையாக 5 % செலுத்தியது காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால் அதனை வழஙக மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| மதிப்பீடு எண். | தொகை |
|---|---|
| 1) 114/2005–2006 | ரூ.10,508/– |
| 2) 216/2005–2006 | ரூ. 7,302/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.13244/2011/இ1

**தீர்மான எண் : 597 – அனுமதிக்கப்பட்டது.**

23. தீர்மானம் எண்.267 தேதி 31.05.2011 – ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 8 இடஙகளிலுள்ள குடிநீர் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய 10.08.2011 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு

| | |
|---|---|
| I | வார்டு எண்.19 கச்சப்புறத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவேக பேனல் போர்டு ஸ்ட்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| II | வார்டு எண்.19 பரசுராமன் பெருந்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரை வேக (4'') சப்மெர்சிபிள்.பம்பு செட் மற்றும் ஸ்டார்ட்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| III | வார்டு எண்.19 பரசுராமன் பெருந்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவே (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர்பழுது பார்த்து இயக்குதல் |
| IV | வார்டு எண்.7 அருகுவிளை ரத்தினம் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| V | வார்டு எண்.7 அருகுவிளை வாட்டர் லைன்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| VI | வார்டு எண்.7 அறுகுவிளை மேற்கு தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| VII | வார்டு எண்.7 அறுகுவிளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( சி.எஸ்.ஐ.சர்ச் பக்கம்) |
| | 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| VIII | வார்டு எண்.22 மறவன் குடியிருப்பு சாந்திதெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் |
| | 1.5 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |

1. M/S. பி.நாகராஜன், என்.எஸ்.ஆகாஷ் எஞ்ஜினியரிங ஒர்க்ஸ், ஈத்தாமொழி. – ரூ.53,060/–
2. M/S.றி.தஙகபாண்டியன், றி.றி.பாண்டியன் எஞ்ஜினியரிங ஒர்க்ஸ் தாராவிளை – ரூ.55,140/–

<u>அலுவலக குறிப்பு</u> – மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள M/S. பி.நாகராஜன்,என்.எஸ்.ஆகாஷ் எஞ்ஜினியரிங ஒர்க்ஸ், ஈத்தாமொழி நிறுவனத்தின் ரூ.53,060/– க்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

கோப்பு எண்.005711/11/இ2

**தீர்மான எண் : 598 – ஒப்புக்கொள்ளப்பட்டது.**

24. தீர்மானம் எண்.265 தேதி 31.05.2011 – ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 5 இடங்களிலுள்ள குடிநீர் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய 10.08.2011 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு

| | |
|---|---|
| I | வார்டு எண்.29 காமராஜபுரம் அம்மன்கோவில் தெரு போர்வெல் வாட்ட.சப்ளை ஸ்கீம் |
| | பழுது பட்டு போரில் விழுந்துள்ள 1.5 குதிரைவேக (4'') சப்மெர்சிபிள் பம்பு செம்டை போர்பிளசிங செய்து தூக்கி பழுது பார்த்து பொருத்தி இயக்குதல் |
| II | வார்டு எண்.21 இருளப்பபுரம் அருந்ததியார் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( மீனாட்சி சாலை) |
| | 7.5 குதிரை வேக சப்மெர்சிபிள்.பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் |
| III | வார்டு எண்.21 இருளப்பபுரம் சிவன்கோவில்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( ரேசன் கடை) |
| | 5 குதிரைவே சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர்பழுது பார்த்து இயக்குதல் |
| IV | வார்டு எண்.21 வட்டவிளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ஻கீம் |
| | போர் பிளசிங செய்தல் மற்றும் பழுதுபட்ட பைப் மாற்றுதல் |
| V | வார்டு எண்3 பள்ளிவிளைவடக்குத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( குடோனிற்கு தெற்கு சைடு) |
| | பழுதுபட்ட 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட்டை தூக்கிவிட்டு மாற்று புதிய 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்தல் |

1. M/S. தெய்வசுவாமி – ரூ.55,364/–
   ஸ்ரீநாராயணசுவாமி எஞ்ஜினியரிங ஒர்க்ஸ்,
   ஈத்தாமொழி.
2. M/S.பி.நாகராஜன் – ரூ.57,245/–
   லெட்சுமி எலக்ட்ரிக்கல் சர்வீஸ்
   வடலிவிளை, கோட்டார்

<u>அலுவலக குறிப்பு</u> – மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள M/S. எஸ்.தெய்வசுவாமி , ஸ்ரீநாராயணசுவாமி எஞ்ஜினியரிங ஒர்க்ஸ்,நாகர்கோவில் நிறுவனத்தின் ரூ.55,364/– க்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

கோப்பு எண்.8409/2011/இ2

**தீர்மான எண் : 599 – ஒப்புக்கொள்ளப்பட்டது.**

25. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் எண்.32179/பி3/2011 நாள் 14.08.2011 இதில் இணைத்து வரப்பெற்ற பிளாஸ்டிக்ஸ் கழிவு ( மேலாண்மை விதிகள் ) 2011 தொடர்பாக நடவடிக்கை எடுக்க இந்திய அரசால் வெளியீடுகள் செய்யப்பட்ட அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அதனை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அதன் நகல் நகர்மன்றத்தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்களுக்கு வழஙகப்படுகிறது. மன்றத்தின் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம்.பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.18506/2009/எச்.3

**தீர்மான எண் : 600 – பதிவுசெய்யப்பட்டது.**

26. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலக கடிதம் எண்.F.NGL/MSW03/2010 நாள் 30.06.2011 தேதிய கடிதத்தில் நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் உள்ள மக்கிய கழிவுகளை நல்லமுறையில் உரமாக்குதல் ஏற்கனவே உள்ள குப்பைகளை அகற்றுதல் குறித்து உரிய கருத்துகள் Anna University / Neeri / IIT. Chennai ஆகிய நிறுவனங்களிடம் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனங்களிலிருந்து வருகை புரியும் விஞ்ஞானிகளுக்கு இங்கு வந்து செல்லும் அனைத்து செலவினங்களுக்கும் உத்தேச செலவு ரூ.40,000/– ஆகும். மேற்படி தொகை செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.18506/2009/எச்.3

**தீர்மான எண் : 601 – அனுமதிக்கப்பட்டது.**

27. மூன்று நகர நல்வாழ்வு மையங்களின் பயன்பாட்டிற்கு மன்றத்தீர்மான எண்.249 நாள் 28.04.2011 – ன் படி ரூ.75,000/– க்கான மருந்து பொருட்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்திடமிருந்து வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப நல இயக்கக மருந்துப்பொருட்களுக்கான 2011–2012 – ம் நிதியாண்டைய ஒதுக்கீடு தாமதிப்பதாலும், நோயாளிகளின் வரத்து அதிகமாகி மருந்துகள் குறைவுபட்டுள்ளதாலும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேலும் ரூ.50,000/– அனுமதிக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.14434/2010/எச்.4

**தீர்மான எண் : 602 – அனுமதிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சி வாகனம் றி.என்.74 ஜே 2839 – ல் செல்ப் மோட்டார் முற்றிலும் பழுதாகி உபயோகப்படுத்த இயலாமல் உள்ளதை ஆனைமலைஸ் ஏஜென்சீஸ் லிமிடெட், திருநெல்வேலி மூலம் நேரடியாக புதியதாக பொருத்தி சீர் செய்திடவும் மேற்படி பணி மேற்கொள்வதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.18,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணி செய்ய உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5021/2006/இ3

**தீர்மான எண் : 603 – அனுமதிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சிக்குட்பட்ட இளங்கடை ஆர்.சி.பரதர்தெரு கதவிலக்கம் எண்.9 – ல் வசித்து வரும் திரு.தாமஸ் என்பவர் தனது வீட்டின் இரண்டாம் தளத்தில் ஏர்டெல் நிறுவனத்தின் அலைபேசி தொலை தொடர்பு கோபுரம் அமைக்க நகராட்சியின் அனுமதியின்றி முயற்சித்தார். மேற்படி கோபுரம் அமைந்தால் மக்களுக்கு இடையூறு ஏற்படும் என இளங்கடை ஆர்.சி.சர்ச் கமிட்டி சார்பில் அதன் உபதலைவர் திரு.கனகராஜ் என்ன்வர் நாகர்கோவில் முதலாம் கூடுததல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.750/2009 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். தற்போது மேற்படி வழக்கில் நான்காம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையரை சேர்த்துள்ளார்.

மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திருமதி.எஸ்.எஸ்.ரெஜினிதேவி ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.15172/2011/எப்.1

**தீர்மான எண் : 604 – அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சியில் பணிபுரியும் நில அளவை பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிய பஙகுத்தொகை 2008–2009 – ம் ஆண்டிற்கு ரூ.2,50,988/– செலுத்தக் கேட்டு தமிழ்நாடு நில அளவைப்பதிவேடுகள் துறை உதவி இயக்குனர், நாகர்கோவில் அவர்களிடமிருந்து கேட்பு கடிதம் ந.க.எண்.4/689/2011 நாடள் 1.09.2011 – ன் படி வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி ரூ.2,50,988/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக அறிவிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.9298/2011/எப்.1

**தீர்மான எண் : 605 – அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சிக்குட்பட்ட வைத்தியநாதபுரம் கோபால்ரோட்டில் நாகர்கோவில் கிராமம் நகர புல எண்.என்.11/36, 42, 43, 44, 47 – யில் 0.23.25.921 ஹெக்டேர் நிலபரப்பு மற்றும் நகர புல எண்.என்.7/21– 2யில் 0.77.69.943 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்ட நிலஙகள் அஙகீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் கலப்புக்குடியிருப்பு பகுதியாக உள்ளதை தொழிற் பகுதியாக மாற்றம் செய்திடவும், நகர புல எண்.என்.11/35, 45 யில் 0.21.10.478 நிலபரப்பு கொண்ட நிலஙகள் அஙகீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் வணிகப்பகுதியாக உள்ளதை தொழிற்பகுதியாக மாற்றம் செய்திடவும், மேற்படி நிலஙகளின் உரிமையாளர் திரு.வி.எஸ்.கே.ராதாகிருஷ்ணன் என்பவர் உரிய வழியாக அரசக்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி உத்தேச மனையின் தென் மேற்கில் நகராட்சி பராமரிப்பிலுள்ள 5.20 மீட்டர் அகலமுள்ள தார்சாலை அணுகு சாலையாக அமைகிறது. இம்மனையை சுற்றிலும் சுமார் 20 அரிசி ஆலைகள் உள்ளது. உத்தேச மனையில் இயஙகிவரும் அரிசி ஆலை சுமார் 50 ஆண்டுகளாக இயஙகி வருகின்றது. எனவே மேற்படி உத்தேச மனையை முழுமைத் திட்டத்தில் தொழிற் பகுதியாக உரிய மாற்றஙகள் செய்ய உறுப்பினர் செயலர் மூலமாக அரசுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படு.றிது.

<u>அலுவலக குறிப்பு</u> – உரிய வழியாக அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

கோப்பு எண்.19579/2010/எப்.1

**தீர்மான எண் : 606 – அனுமதிக்கப்பட்டது.**

32. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான வாகனம் எண்.றி..ன்.74–எல்.5160– க்கு தகுதி சான்று பெற தேவையான வேலைகளை செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.466 நாள் 05.08.2011 – ல் ரூ.32,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது அதன் பேரில் 19.08.2011 – ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை<br>ரூ |
|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | 26960/– |
| 2 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ்,<br>ஆசாரிபள்ளம் ரோடு, நாகர்கோவில் | 29180/– |
| 3 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | 30,625’– |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகை கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவவத்திற்கு வேலை செய்ய உத்திரவு வழஙகவும், அதற்கான தொகை வழஙகவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள மணி மோட்டடார் நிறுவனத்திற்கு வேலை செய்ய உத்திரவு வழஙகவும், அதற்கான தொகை வழஙகவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10202/2011/எச்.2

**தீர்மான எண் : 607 – அனுமதிக்கப்பட்டது.**

33. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் றி.என்.74– 5137 – க்கு பழுதுகள் நீக்கி வேலை செய்ய 18.08.2011 – ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
|---|---|---|
| 1 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ் | 11450/– |
| 2 | மணி மோட்டார் ஒர்க்ஸ் | 10,980/– |
| 3 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் | 11580/– |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகை கொடுத்துள்ள மணிமோட்டார் ஒர்க் நிறுவனத்திற்கு வேலை செய்ய உத்திரவு வழஙகவும் அதற்கான தொகை வழஙகவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு வேலை செய்ய உத்திரவு வழஙகவும் அதற்கான தொகை வழஙகவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10032/2010/எச்.2

**தீர்மான எண் : 608 – அனுமதிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 பீச்ரோடு சந்திப்பின் தென்புறம் உயரமான பகுதிகளுக்கு குடிநீர் கிடைக்க புதியதாக வால்வு அமைக்கவும் அதற்கு உண்டாகும் உத்தேச செலவு ரூ.5000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.15917/2011/இ2

**தீர்மான எண் : 609 – அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 உச்சி மாகாளியம்மன்கோவில்தெரு மற்றும் வார்டு எண்.32, காணியாளன் புதுத்தெருவிலும் இயங்கி வந்த ஜெட் மோட்டார்கள் பழுதடைந்து உள்ளதால் மேற்படி இடஙகளில் உள்ள மோட்டாரை மாற்றி 1.5 H.P. சப்மெர்சிபிள் மோட்டார் பொருத்த நகர்மன்ற உறுப்பினரின் கடிதத்தின்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி மோட்டார் பொருத்த ஆகும் உத்தேச செலவு ரூ.45,000/– க்கு மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம் கோப்பு எண்.15918/2011/இ2

**தீர்மான எண் : 610 – அனுமதிக்கப்பட்டது.**

36. குடிநீர் சுத்திகரிப்பு நிலைய நீரேற்று நிலையம் III- ல் இயஙகிக் கொண்டிருந்த யூனிட் III 50 குதிரை திறன் நீர் மூழ்கி மோட்டார் காயில் கருகி பம்ப் பழுதுபட்டுள்ளது. மேற்படி மோட்டார் காயில் ரீவைண்டிங செய்து, பம்ப் உதிரி உறுப்புகள் புதிதாக மாற்றி மோட்டார் – பம்பை பழுது நிவர்த்தி செய்து திரும்ப பொறுத்தி இயக்கிக் கொடுக்கும் வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.செல்வம் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.85/– @ 0.12 % குறைவு

2. M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.410/– @ 0.59% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. குடிநீர் வினியோக பணி அவசர அவசியம் கருதி மோட்டார் பம்ப் பழுது நிவர்த்தி செய்தல் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.70,000/– க்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

2. 10.08.2011 – ல் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகிய M/S.திருமலர் இஞ்ஜினியரிங எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் அவர்களின் 0.59% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.13431/2011/இ2

**தீர்மான எண் : 611 – அனுமதிக்கப்பட்டது.**

37. முக்கடல் நீர்த்தேக்கத்தில் உள்ள 60 குதிரை திதின் நீரேற்றுகள் இயஙகக்கூடிய நீரேற்று நிலையத்தில் இயஙகிய 60 குதிரை திறன் யூனிட் II மோட்டாரின் மோட்டார் காயில் கருகி பழுதுபட்டுள்ளது. பழுதுபட்டுள்ள 60 H.P.slipring Induction Meter - ன் ரோட்டார் காயில் ரீ வைண்டிங செய்து , மின் சாதன உதிரி உறுப்புகள் புதியது மாற்றி மோட்டார் பம்பை பழுது நிவர்த்தி செய்து திரும்ப நல்ல முறையில் இயக்கி கொடுக்கும் வேலைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.செல்வம் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.450/– @ 0.69 % சதவிகிதம் குறைவு

2. M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.700/–@ 1.05 % சதவிகிதம் குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. 10.08.2011 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான 1.05 % சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்.ள்ளி.வழஙகிய M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதி அளிக்கலாம்.

2. குடிநீர் வினியோக பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி உத்தேச செலவினம் ரூ.68,000/– க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் ஒப்புக்கொண்டு அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.13434/2011/இ2

**தீர்மான எண் : 612 – அனுமதிக்கப்பட்டது.**

38. மார்த்தால் நீரேற்று நிலையத்தில் இயங்கி வந்த 85 குதிரை திறன் மின் மோட்டாரின் பம்ப் பழுதுபட்டுள்ளது. மோட்டார் இயக்கத்திற்கான மின்சாரம் வழுங்கக்கூடிய மின் வாரிய மின்கம்பம் பழுதுபட்டு கீழே சரிந்ததால் ஏரியல் பியூஸ் கேரியர்கள் மற்றும் இணைப்பு சாதனஙகளையும் புதியது மாற்றி பம்ப் முழுவதையும் பேரிஙகுகள், சாப்ட் புஸ்கள் புதிதாக மாற்றி பழுது நிவர்த்தி செய்து கொடுக்கும் வேலைக்காக 17.08.2011 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.செல்வம் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ், நாகர்கோவில் – மதிப்பீட்டைக்காட்டிலும் ரூ.93/– @ 0.18 % சதவிகிதம் குறைவு

2. M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.358/–@ 0.72 % குறைவு

<u>அலுவலக குறிப்பு</u> – 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழஙகிய M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் 0.72% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதிக்கலாம்.

2. குடிநீர் வினியோக பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற உத்தேச செலவினம் ரூ.50,000/– க்கான மதிப்பீட்டிற்கு மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் ஏற்று அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.14267/2011/இ2

**தீர்மான எண் : 613 – அனுமதிக்கப்பட்டது.**

39. முக்கடல் நீர்த்தேக்கத்தில் உள்ள 120 H.P. நீரேற்று நிலையத்தில் இஙகிவரும் 120 H.P.TurbuinePump Motor யூனிட் .I – ன் ஸ்டாட்டர் காயில் கருகி பழுதுபட்டுள்ளது. 120 குதிரை திறன் டர்லைன் பம்ப் மோட்டார் ஸ்டார்டர் காயில் ரீ வைண்டிங செய்து பேரிஙகுகள் புதிதாக மாற்றி, ஸ்டாட்டர் மற்றும் OCB அனைத்தும் சர்வீஸ் செய்து பழுதுபட்டுள்ள யூனிட் I மோட்டார் பம்பை திரும்ப பொருத்தி இயக்கிக் கொடுக்கும் வேலைக்காக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.700/–@ 1.05 % சதவிகிதம் குறைவு

2.M/s.செல்வம் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ், நாகர்கோவில் –ரூ.200/– @ 0.12 % சதவிகிதம் குறைவு

<u>அலுவலக குறிப்பு</u> – 1. குடிநீர் வினியோக பணி அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,60,000/– க்கு மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததை மன்றம் ஏற்று அனுமதி அளிக்கலாம்.

2. 10.08.2011 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகிய M/s திருமலர் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.700/– @ 1.05 % சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்று அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.13433/2011/இ2

**தீர்மான எண் : 614 – அனுமதிக்கப்பட்டது.**

40. குடிநீர் சுத்திகரிப்பு நிலைய நீரேற்று நிலையம் I – ல் இயங்கி கொண்டிருந்த யூனிட் IV 25 குதிரை திறன் நீர்மூழ்கி மோட்டார் காயில் கருகி பம்ப் பழுதுபட்டு இயஙகவில்லை. 25 குதிரை திறன் நீர்மூழ்கி மோட்டாரின் காயில் ரீவைண்டிங செய்து, பம்ப் பழுது நிவர்த்தி செய்து மோட்டார் – பம்பை திரும்ப இயக்கிக் கொடுக்கும் வேலைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.செல்வம் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.46/– @ 0.12 % சதவிகிதம் குறைவு

2. M/s திருமலா் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.161/–@ 0.46 % குறைவு

**அலுவலக குறிப்பு –** 1. குடிநீர் பணி அவசர அவசியம் கருதி மேற்படி மோட்டார் – பம்ப் பழுது நிவர்த்தி செய்தல் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.40,000/– க்கு மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததை மன்றம் ஏற்று அனுமதி அளிக்கலாம்.

2. 10.08.2011 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகிய M/s திருமலா் இஞ்ஜினியரிங & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் அவர்களின் 0.46% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.13432/2011/இ2

**தீர்மான எண் : 615 – அனுமதிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள்.பராமரிப்பிற்கு ரூ.18.10 இலட்சத்திற்கு தேவையான மின் உதிரிப்பொருட்கள் வினியோகம் செய்வதற்கு 22.07.2011 அன்று மின்னணு முறையில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம்

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. மகாவீர் எலக்ட்ரோ கண்ட்ரோல்ஸ், மேலமாசிவீதி மதுரை (–) 21.05% மதிப்பீட்டைவிட குறைவு
2. JES எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துவபுரம் (–) 13.43 % மதிப்பீட்டைவிட குறைவு
3. திரு.றி.ராஜேஷ், றி.ஆர்.டிரேடர்ஸ் (–) 20.43 % மதிப்பீட்டைவிட குறைவு

மண்டல செயற்பொறியாளரிடம் 23 பொருட்களுக்கும் ஒப்பந்தப்படிவம் ஒப்பதல் பெற்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் L 1 ஆக வரப்பட்ட மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோல்ஸ் (–) 21.05 % குறைவாக கொடுத்துள்ளார். இவர் கொடுத்த விலையைவிட சில இனஙகளுக்கு JES எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் றி.ஆர்.டிரேடர்ஸ் குறைவாக கொடுத்துள்ளார். மின்னணு ஒப்பந்ததபுள்ளி ஆனதால் பொருள் வினியோகத்தை தனித்தனியாக பிரிக்க இயலாது என்பதாலும் நகராட்சி நிர்வாக நலன் கருதியும் நிதியினை கருதியும் சில இனஙளில் L2, L3 பொருட்களின் விலைப்படியான L1 ஆன மகாாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலிடம் விலை குறைப்பு செய்து தர இயலுமா எனக்கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி நிறுவனம் கடிதத்தை பெற்றுக்கொண்டு விலை குறைப்புக்கான சம்மதக்கடிதம் தரப்பட்டுள்ளது. அதன்படி திருத்திய ஒப்பு நோக்கு பட்டியலின் படி (–) 25.75 % மதிப்பீட்டைவிட குறைவு.

இவ்வாறு மதிப்பீட்டு தொகையைவிட (–) 25.75% குறைவாக உள்ளது. மேற்படி மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக கொடுத்துள்ள மாகவீர் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின்படி

அனைத்து தெருவிளக்கு உபகரணஙகளையும் வாஙகி பயன்படுத்தி கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோல்ஸ் (–) 25.75 % மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ளமையால் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள தொகை ரூ.4,57,860/– ல் 50% தொகையாக ரூ.2,28,930/– ஐ பொதுப்பணித்துறை முதன்மை பொறியாளர் செயல்முறை உத்தரவு எண்.டி1/50 சி.ஆர்./சி10 /2006 – நாள் /04.02.2006 – ன் படி கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழுஙக மன்றம் அனுமதிக்கலாம்.

3. அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் அறிவிப்பு கடிதம் பெறப்பட்ட 7 தினஙகளுக்குள் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2,28,930/– ஐ நகராட்சியில் செலுத்தி வேலை உத்தரவு பெற்று கொள்ளப்படாத நிலையில் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த மகாவீர் எலக்ட்ரிக்கல்ஸ் வைப்புத்தொகையினை பறிமுதல் செய்யவும் ஒப்பந்தத்தை ரத்து செய்து மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று அறிவிப்பு கடிதம் வழுஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

5. நகர்மன்றத்தீர்மானம் எண்.129 நாள் 25.02.2011 – ல் ரூ.18,10,000/– ற்கு நிர்வாக அனுமதி வழுஙகப்பட்டுள்ளது. கோப்பு எண்.3618/2010– 2011

**தீர்மான எண் : 616 – அனுமதிக்கப்பட்டது.**

42. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த Texco ஓட்டுனர் பணிக்கு வராததினால் இரு ஓட்டுனர்களை வழுஙக கேட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2356/2003/எச்.1 நா. 06.01.2011 – ன் படி பொது மேலாளர் டெக்ஸ்கோ, சென்னை அவர்களுக்கு கடிதம் மற்றும் 03.02.2011 மற்றும் 09.02.2011 – ம் தேதிகளில் தந்தியும் அனுப்பியும் எந்தவித பதில் வரப்படாததால் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேஙகும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டிய நிலை இருந்து வந்ததினால் அவசரம் அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக டெக்ஸ்கோ ஓட்டுனரின் மாத ஊதியமான ரூ.6800/– ன் படி ஒப்பந்தம் மூலம் நிரப்பி கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஆர்.ரமணி , காந்திபுரம் ஊராட்சி குழு கூட்டமைப்பு அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தீர்மானம் எண்.218 நாள் 25.02.2011 – ன் படி இரண்டு ஓட்டுனர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய மன்றம் அனுமதி வழுஙகியதை தொடர்ந்து இரண்டு ஓட்டுனர்கள் ஒப்பந்த அடிைப்படையில் நியமனம் செய்து ஓட்டுனர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில் திருமதி,ஆர்.ரமணி, காந்திபுரம் ஊராட்சி குழு கூட்டமைப்பு அவர்களின் 26.08.2011 –ம் தேதிய கடிதத்தில் ஓட்டுனர்களுக்கு வழுஙகப்படும் ஊதியம் குறைவாக உள்ளதாகவும் தற்போது டெக்ஸ்கோ ( Tamil Nadu Ex-Servicemen's Corporation Limited ) நிறுவனம்

ஓட்டுனர்களுக்கு புதிய ஊதியம் வழஙகப்பட்டுள்ளதாகவும் அந்த ஊதியத்தினை வழஙகுமாறு கேட்டு கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

பொது மேலாளர், Tamil Nadu Ex-Servicemen's Corporation Limited (Texco) சென்னை அவர்களின் கடிதம் எண்.Texco/NP/NGL/Municipality / DVR/2010 நாள் **11.08.2011 –** ன்படி அரசு கடிதஙகளின்படி ஓட்டுனருக்கு மாத சம்பளம் ரூ.**8905/– 01.04.2011** முதல் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காந்திபுரம் ஊராட்சிக்குழு கூட்டமைப்பு அளித்துள்ள **0.37%** குறைவு ஒப்பந்தப்புள்ளிக்கு தற்போது டெக்ஸ்கோ நிறுவனத்தினரால் திருத்திய சம்பளம் ரூ.**8905/–** க்கு வழஙகப்பட்டுள்ள தொகைக்கு மேற்கண்ட காந்திபுரம் ஊராட்சி குழுவிற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுனர்களை வழஙகக் கேட்டும் மேற்கண்ட ஒப்பந்தம் ஓராண்டிற்கு நி.ணயம் செய்து மாதம் ரூ.**8905/–** வீதம் காந்திபுரம் ஊராட்சி குழு கூட்டமைப்பு அளித்துள்ள **0.37** % குறைவு ஒப்பந்தப்புள்ளி அடிப்பைடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> **–1 .** நகர்மன்ற தீர்மானம் எண்.**218** நாள் **25.02.2011 –** ன் படி அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

2. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 617 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**43.** இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகப் பணிகள் நிமித்தமாக வெளியூர் பயணம் சென்று வந்தமைக்கு கீழ்க்கண்ட விபரப்படி பயணப்படி வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வஎ | பெயர் | பதவி | பயணம் மேற்கொண்ட இடம் | பயண்ப்படி தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஜெயச்சந்திரன் | சமுதாய அமைப்பாளர் | சென்னை | **3292/–** |
| 2 | திரு.றி.கிருஷ்ணன் | சமுதாய அமைப்பாளர் | திருநெல்வேலி | **172/–** |
| 3 | திரு.எஸ்.ஜே.ராஜ்குமார் | இ.நி.உதவியாளர் | திருநெல்வேலி | **172/–** |
| | | | மொத்தம் | **3636/–** |

<u>**அலுவலக குறிப்பு** –</u> மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**6584/2011/**எச்.**5**

**தீர்மான எண் : 618 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**44.** இந்நகராட்சி வார்டு எண்.**34** கனகமூலம் புதுத்தெருவில் பட்டுபோன நிலையில் பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் விதமாக உள்ள வேம்பு மரத்தினை வெட்டி அகற்றிட **23.08.2011** அன்று பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதில் திரு.றி.அசோக்குமார், நாகர்கோவில் என்பவரால் ரூ.**4550/–** க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்கப்பட்டது. மேற்படி ஏலத்தொகையின்படி மேற்படி ஏலதாரருக்கு மேற்படி மரத்தை வெட்டி எடுத்து செல்லும் பொருட்டு உத்தரவு வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> – ஏலத்தொகை ரூ.**4550/–** வனத்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.**4290/–** ஐ விட கூடுதலாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**4842/2008/**இ**3**

**தீர்மான எண் : 619 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**45.** நாகர்கோவில் நகராட்சி சொர்ண ஜெயந்தி திட்டம் ( SJSRY) 2011–2012 பல்வேறு அலகிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரது கடித ந.க.எண்.12919/2011/UPA/3 நாள் 16.06.2011 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.3122/2011/சி1 நாள் 24.06.2011 ஆகிய கடிதங்களின் பிரகாரம் SJSRY திட்டத்திற்கு ஒதுக்கீடு தொகையாக ரூ.50,85,702/– பெறப்படவுள்ளது. அரசு SJSRY புதிய வழி காட்டுதலின்படி நகராட்சிக்கு உட்பட்ட வறுமைக்கோட்டு நபர்களை கண்டறிந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| Sl. No. | Scheme Name | Amount Alloted | Physical Target | | | Financial Target | | | Total Target |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | SC | ST | Minority | SC | ST | Minority | |
| 1 | USEP (Subsidy ) | 898800 | 3 | 1 | 3 | 105103 | 60778 | 134820 | 18 |
| 2 | UWSP (Group Loan) | 674100 | | | | | | | 25 |
| 3 | USWP (TCS RF) | 224700 | | | | | | | 112 |
| 4 | Step-up (Training ) | 1348200 | 15 | 9 | 20 | 208944 | 91167 | 202230 | 135 |
| 5 | UWEP | 1099705 | 417 | 23 | - | 85386 | 11437 | | 2199 |
| 6 | UCDN | 449400 | | | | | 4674 | | |
| 7 | A & OE ( 5%) | 244246 | | | | | | | |
| 8 | JEC ( 3%) | 146551 | | | | | | | |
| | Total | 5085702 | | | | | | | |

மேற்படி SJSRY – 8 அலகிற்கும் ரூ.50,85,702/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அதனை நடைமுறைப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1. மன்றம் அனுமதி வழஙகலாம்.

2. 01.04.2009 SJSRY புதிய வழிகாட்டுதல் படி சமுதாய அமைப்பாளர்கள் வழியாக நடைமுறைப்படுத்தலாம்.

3. வறுமை ஒழிப்புப் பிரிவிற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**தீர்மான எண் : 620 – அனுமதிக்கப்பட்டது.**

**46.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் மாற்று திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை தங்கள் பராமரிப்பிற்கு வழஙகிடுமாறும் , மாற்று திறனாளிகளுக்கு பராமரிப்பு உபகரணஙகள் இலவசமாக வழஙகுவதாகவும் செயலாளர் சிற்றுந்து உரிமையாளர்கள் சஙகம் ( பதிவு எண்.135/2001) நாகர்கோவில் அவர்கள் கடிதம் எண்.0007/சி28/2011 நாள் 30.08.2011 – ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் கோரப்பெற்ற அனுமதியினை மாற்று திறனாளிகள் நலன் கருதி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. பராமரிப்பு தொடர்பாக பின்னாளில் எவ்வித உரிமையும் கோரப்படக்கூடாது
2. மேற்படி பேருந்து நிலையம் வெளியூர் பேருந்துகள் வந்து செல்லும் பேருந்து நிலையம் என்பதால் 24 மணி நேரமும் திறந்திருக்கப்படவேண்டும்.
3. மேற்படி அறையில் போதுமான இருக்கைகள் தங்கள் சொந்த செலவில் அமைக்கப்படவேண்டும்.
4. மேற்படி அறையினை வேறு எவ்வித பயன்பாட்டிற்கும் உபயோக படுத்தக்கூடாது
5. மேற்படி அறையினை நகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைக்க கோரும் நிலையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வசதியுடன் மறுப்பேதுமின்றி உடன் ஒப்படைக்கப்படவேண்டும்.
6. இந்நகராட்சி பணியாளர்கள் / அலுவலர்களின் அவ்வப்போதைய ஆய்விற்கு போதிய ஒத்துழைப்பு வழஙகப்படவேண்டும்.
7. மேற்படி அறையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப்பணிகளுக்கு நகராட்சியின் எழுத்து மூலமான அனுமதி பெறப்படவேண்டும்.
8. மேற்படி அறையினை பயன்படுத்த மாற்று திறனாளிகளிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படக்கூடாது.
9. மேற்படி அறையில் பொறுப்பான நபரினை பணி அமர்த்த வேண்டும். அவர் குறித்த முழு விபரமும் ஆளறி சான்று நகலுடன் அலுவலகத்திற்கு அறிக்கை செய்யப்படவேண்டும்.
10. மேற்படி அறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டும்.
11. மேற்படி நிபந்தனைகளை மீறும் நிலையில் எவ்வித முன் அறிவிப்புமின்றி தஙகளுக்கு வழஙகப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

<u>அலுவலக குறிப்பு</u> – கன்னியாகுமரி மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலர் தனது 18.05.2010 – ம் தியதிய கடிதம் ந.க.எண்.545/ஊ.ந./2010 – ல் பயன்பாட்டில் இல்லாத மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகளுடன் அமைந்த ஓய்வு அறையை மீண்டும் மாற்று திறனாளிகள் மட்டுமே பயன் பெறும் வகையில் மாற்றி தர கேட்டுள்ளதால் மாற்று திறனாளிகள் நலன் கருதி மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழஙகுவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.10417/2008/அ13

**தீர்மான எண் : 621 – அனுமதிக்கப்பட்டது.**